வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கப் பணிப்புரைகள்

---

### இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் இராசதந்திர ரூபாக் கணக்குகள் தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணுதல்) ஒழுங்குவிதிகளினதும் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1) மற்றும் 9(2)ஆம் பிரிவுகளினதும் நியதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆட்களுக்குப் புறம்பாக, பின்வரும் பெயர்களில் இராசதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் இராசதந்திர ரூபாக் கணக்குகளையும் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்பட்டனர்.

**1.1 தகைமையுடைய ஆட்கள்**

(இ) வெளிநாட்டு இராசதந்திர பணியினர்

(ஈ) இலங்கையிலுள்ள இராசதந்திர அல்லது இராசதந்திரமல்லா கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பதுடன் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் வதிவிட விசாவினைப் பெற வேண்டிய தேவையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ள இராசதந்திர ஆளணியினரின் குடும்ப உறுப்பினர்கள்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017 நவெம்பர் 27**